செ.வெ.எண் : 11/ செப்டம்பர் நாள் : 06-09-2017

# இராமநாதபுரம் மாவட்டத்தில்
# இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது
## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் செப்டம்பர் 2017 திங்களுக்கான இலவச கண் சிகிச்சை முகாம் 09.09.2017 அன்று மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் பரமக்குடி ஆயிர வைசிய தொடக்கப்பள்ளியிலும், 10.09.2017 அன்று கிருஷ்ணன்கோவில் சங்கரா கண் மருத்துவமனை சார்பில் கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளியிலும், 15.09.2017 அன்று நிலக்கோட்டை தமியான் கண் மருத்துவமனை சார்பில் சின்னகீரமங்களம் (திருவாடானை வட்டம்) ஆர்.சி.சர்ச் வளாகத்திலும், 16.09.2017 அன்று கிருஷ்ணன்கோவில் சங்கரா கண் மருத்துவமனை சார்பில் பரமக்குடி ஆயிர வைசிய கல்யாண மஹாலிலும், 19.09.2017 அன்று மதுரை மீனாட்சி மிஷன் கண் மருத்துவமனை சார்பில் மண்டபம் பேரூராட்சி கல்யாண மஹாலிலும் நடைபெறவுள்ளன.

இம்முகாமில் பொதுமக்கள் கலந்துகொண்டு கண் தொடர்புடைய நோய்களுக்கான சிகிச்சையினைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**